2010 மே 13]

## (ஆ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2009–2010 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2009–2010 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195 (2), 203 (3), 211 (3) மற்றும் 256 (2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*2009–2010 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற குழுக்களின் பதவிக்காலத்தை நீட்டித்தல் குறித்த அடுத்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2009–2010 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன்*

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 மே 13

வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227 (2), 239 (2), 248 (2), 253 (2), 261 (3), 264 (2) மற்றும் 268 (iv) ஆகியவற்றைத் தளர்த்தி அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 231 (2)-ஐத் தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரை பணியாற்ற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(இ) கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

—தொடர்ச்சி

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் தொடர்கிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.